பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 மார்கழி 19 திங்கட்கிழமை 03.01.2022 கதிர் 287

## முதலை தாக்கியதில் சுழியோடி உயிரிழப்பு

தெஹிவளை கடலில் முதலை தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

58 வயதான சுழியோடியே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

தெஹிவளை கடற்பகுதியில் நீராடிக் கொண்டிருந்தபோது அவரை முதலை ☞2

### வீரமும் தியாகமும் நிறைந்த வல்வெட்டித்துறை மண்ணில்

# இனப்படுகொலை அரசின் பிரதிநிதிகள் பட்டத் திருவிழாவுக்கு விருந்தினர்களா?

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி போர்க்கொடி

இனப்படுகொலை அரசின் பிரதிநிதிகளை பட்டத்திரு விழாவுக்கு விருந்தினர்களாக அழைக்கும் முயற்சிக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கண்டனம் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திர குமார்பொன்னம்பலம்எம்.பி., பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் எம்.பி. ஆகியோர் இன்று ☞2



## ஆட்சி மாற்றப் புரட்சிக்கு ஜே.வி.பி. அறைகூவல்!

இந்த ஆட்சியை விரட்டியடித்து புதிய ஆட்சியை உருவாக்குவதற்கு ஜனநாயக வழியில் மக்கள் வீதிக்கு இறங்கினால் அதற்கான அரசியல் தலைமைத்துவத்தை வழங்குவதற்கு நாம்தயார்என்றுஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாட்டில்அவசியமானதொரு அரசியல் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டிய முக்கியமான ☞2



### யாழ். போதனா வைத்தியசாலையில்

## மூன்றாவது மலேரியா நோயாளி அடையாளம்

யாழ். போதனா வைத்திய சாலையில்மலேரியாநோயாளி ஒருவர் இன்று இனங்காணப் பட்டுள்ளார். இவருக்கு பிளாஸ் மோடியம் பல்சிபரம் என்ற மூளை மலேரியாவை ☞2



## சப்புகஸ்கந்த எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்துக்கு இன்று தொடக்கம் பூட்டு

சப்புகஸ்கந்த எரிபொருள் சுத்திகரிப்பு நிலையம் இன்று முதல் மீண்டும் மூடப்பட்டுள்ளது.

டொலர் தட்டுப்பாடு காரணமாக, மசகு எண்ணெய் கொள்வனவு செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுள்ள நிலையிலேயே இவ்வாறு மூடப்பட்டுள்ளது. ☞2

## விவசாயத்துறை அமைச்சர் 'பெயில்'

### விளாசித்தள்ளும் இராஜாங்க அமைச்சர்

விவசாயத்துறை அமைச்சர் தோல்வியடைந்துவிட்டார். எனவே, செய்யக்கூடிய உரிய நபர்களிடம் அமைச்சுப்பதவிகளைகையளிக்கப்பட வேண்டும் - என்று இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

அந்நிய ஆக்கிரமிப்பின் போது கூட, எமது நாட்டு விவசாயம் இந்தளவுக்கு பாதிக்கவில்லை. ஆனால், தற்போது தவறான முடிவுகள் எடுக்கப்பட்டதால் பெரும் பாதிப்பு ☞2





## மலையக மாணவன் உலக சாதனை

கொட்டகலையைச் சேர்ந்த பிரபாகர் - ரெஷ்னி தம்பதிகளின் புதல்வர் லவ்னீஷ் மிக இளவயதில் உலக வரைபடத்தில் உள்ள நாடுகளை அடையாளம் காணும் சாதனையைப் படைத்துள்ளார். அதி வேகமாக உலக நாடுகளை அடையாளம் காணுவதில் இந்தச் சாதனை நிலைநாட்டியுள்ளார்.

உலக வரைபடத்தின் அனைத்து நாடுகளையும் ☞2

## சமலுக்கு விவசாயத்துறை பதவியேற்க அவர் மறுப்பு



விவசாயத்துறை அமைச்சுப் பதவியை ஏற்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடுத்த அழைப்பை அமைச்சர் சமல் ராஜபக்ஷ ஏற்கமறுத்துள்ளார் என்று அரசியல் வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது. ☞2

## இரு பிள்ளைகளை நிர்வாணமாக்கி துன்புறுத்திய கொடூர தந்தை கைது

ஹற்றன் - குடாகம சமகி மாவத்தை பிரதேசத்தில் பிள்ளைகள் இருவரை துன்புறுத்திய குற்றச்சாட்டில், குறித்த பிள்ளைகளின் தந்தை ஹற்றன் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மூத்த பெண் பிள்ளைக்கு 11 வயதாகும் நிலையில் மற்ற இரண்டு பிள்ளைகளுக்கும் 8 மற்றும்7வயதுசிறுமிகளாவர். அதேபோல்ஆண்பிள்ளைக்கு 6 வயது ஆகும்.

6 வயதுடைய சிறுவனும், அச்சிறுவனின் அக்காவான 7 வயது சிறுமியுமே இவ்வாறு அவர்களது தந்தையால் துன்புறுத்தப்பட்டுள்ளதுடன், இதன் போது அவர்களது தாயும் அருகிலிருந்துள்ளார். ☞2

## வாகன விபத்துக்களில் 9 நாள்களில் 86 பேர் பலி

நாட்டில் கடந்த 9 நாள்களில் இடம்பெற்ற வீதி விபத்துகளில் 86 பேர் பலியாகியுள்ளனர்.

டிசெம்பர் 25ஆம் திகதி முதல் டிசெம்பர் 31ஆம் திகதி வரை 52 வீதி விபத்துகள் இடம்பெற்றுள்ளன. இவற்றில் 53 பேர் உயிரிழந்துள்ளனர்.

2022ஆம் ஆண்டுஜனவரி மாதம் முதலாம் திகதி இடம்பெற்ற வீதி விபத்துகளில் 18 பேர் உயிரிழந்துள்ளனர். 2ஆம் திகதி இடம்பெற்ற விபத்துகளில் 12 பேர் பலியாகியுள்ளனர்.

2021ஆம் ஆண்டில் 2 ஆயிரத்து 385 விபத்துகள் ☞2

## முதலை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தாக்கியுள்ளது என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

படுகாயமடைந்த அவர் களுபோவில போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

## இனப்படுகொலை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வல்வெட்டித்துறை மண்ணில் இது வரை காலமும் தமிழர் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் வகையில் பட்டத்திருவிழா மிகச் சிறப்பாக நடத்தப்பட்டு வந்திருந்தது. ஆனால், வழமைக்கு மாறாக, இவ் வருடம் தமிழின விரோத சக்திகளின் வழிநடத்தலில், தமிழினத்தின் வாழ்வுரிமையைச் சிதைத்த, இனவழிப்பு அரசின் பிரதிநிதிகளை விருந்தினர்களாக்கி, அவர்களின் பங்குபற்றலுடன் இவ்விழாவை நடத்த முற்பட்டுள்ள அரச முகவர்களின் சதிமுயற்சிக்குள், ஏற்பாட்டுக் குழுவினரைச் சிக்க வைத்துள்ள இந்தச் செயற்பாடானது தமிழின பண்பாட்டு அழிப்பின் தொடர்முயற்சியாகும்.

இவ்வாறு தமிழினப் பண்பாட்டு அழிப்பின் தொடர் முயற்சியின் அங்கமாக, இப் பட்டத்திருவிழா நிகழ்வு நடைபெறுமாயின், தமிழின வரலாற்றின் கறைபடிந்த நிகழ்வாகவே, எதிர்வரும் காலங்களில் இந்நிகழ்வு வரலாற்றில் பதியப்படும்.

தமிழர் வரலாற்றில் பின்னிப் பிணைந்த பாரம்பரிய நிகழ்வான பட்டத்திருவிழாவில், இவ்வாறான கறைபடிந்த வரலாற்றுத் தவறை மேற்கொள்ளத் துணைபோக வேண்டாம் என விழாவின் ஏற்பாட்டாளர்களைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வேண்டி நிற்கின்றது.

தமிழ் மக்களுக்கு எதிரான பேரினவாத ஒடுக்குமுறை, இனப்படுகொலையாக விஸ்வரூபம் எடுத்தபோது, சிங்கள - தமிழ்த் தேசிய இனங்கள் மத்தியில் முரண்பாடுகள் முற்றியது. ஒற்றையாட்சியின் கீழ் ஐக்கியமாக வாழமுடியாத நெருக்கடி நிலை தோன்றியபோது, சுயநிர்ணயஉரிமையின்அடிப்படையில் அரசியல் சுதந்திரப் போராட்டம் உதித்த மண்ணில் நடக்கக் கூடிய ஒரு நிகழ்வுக்கு, தமிழினவழிப்பு அரசின் பிரதிநிதிகளை விருந்தினர்களாக்க முற்படும் பேரினவாத முகவர்களின் திட்டமிட்ட சதிவலைக்குள் சிக்காது, ஏற்பாட்டாளர்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

சர்வதேச அரங்கிலுள்ள, தமிழ் மக்களுக்கான பொறுப்புக் கூறல் விடயங்களை, இலங்கை அரசு முற்றுமுழுதாகப் புறக்கணித்தே வருகின்றது. வலிந்து காணாமல்ஆக்கப்பட்டோரின்உறவினர் இன்றும் வீதிகளில் நின்று, நீதிவேண்டிப் போராடிவருகிறார்கள்.

தமிழர் தாயகம் மீது, திட்டமிட்டு சிங்கள மயமாக்கல் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு, தமிழர்களின் பூர்வீக நிலங்கள் அபகரிக்கப்பட்டு, கட்டமைக்கப்பட்ட இனவழிப்பு தொடரும் சூழ்நிலையில், தமிழின அழிப்பு அரசின் பிரதிநிதிகளை விருந்தினர்களாக அழைப்பதென்பதும், அதற்கு ஏற்பாட்டாளர்கள் தன்னிலை விளக்கம் கொடுப்பதென்பதும் ஒருபோதும் நியாயப்படுத்த முடியாத மிக மோசமான செயற்பாடாகவே அமையும்.

வீரமும், தியாகமும், அளப்பரிய அர்ப்பணிப்புக்களும் நிறைந்த தமிழ் மண்ணில், தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்காக, ஒரு உன்னதமான தேசிய விடுதலைப் போராட்டம் உதித்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மண்ணில், அற்ப நலன்களை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்படும் தீர்மானங்கள் வரலாற்றில் என்றுமே மன்னிக்கப்பட முடியாதவையாகவே இருக்கும் என்பதைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வலியுறுத்த விரும்புகின்றது.

எனவே, குறித்த பட்டத்திருவிழாவுக்கு இலங்கை இனப்படுகொலை அரசின் பங்காளிகளையும், அவர்களுக்குத் துணை நின்றவர்களையும், விருந்தினர்களாக அழைக்கும் முடிவை ஏற்பாட்டாளர்கள் உடன் நிறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது.

## ஆட்சிமாற்றப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கால கட்டத்தில் நாம் உள்ளோம். எனவே, மக்கள் புரட்சிக்கும், புதிய ஆட்சிக்கும் தலைமையேற்க தயாராகவே இருக்கின்றோம் என்றும் அநுரகுமார கூறியுள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடி மற்றும் பொருளாதார வீழ்ச்சிக்கு ஆட்சியாளர்களே காரணம். அவர்களின் தவறான கொள்கைகளாலேயே நாடு கடன் பொறிக்குள் சிக்கியுள்ளது. இந் நிலைமைக்கு கடந்த அரசும் பொறுப்புக்கூறவேண்டும். புரட்சி மூலமே இந்த நெருக்கடியில் இருந்து மீள முடியும். அது ஜனநாயக வழியிலான அரசியல் புரட்சியாக அமைய வேண்டும். இதற்கு அனைத்து மக்களினதும் ஒத்துழைப்பு வேண்டும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## மூன்றாவது ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஏற்படுத்தும் கிருமித் தொற்று இனங் காணப்பட்டுள்ளது.

குறித்த நபர் தென்னாபிரிக்காவில் இருந்து அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தவர்.

கடந்த ஒரு மாதத்தில் யாழ். போதனா வைத்தியசாலையில் இனங்காணப்பட்ட மூன்றாவது மலேரியா நோயாளி இவராவார்.

## விவசாயத்துறை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஏற்பட்டுள்ளது. எம்மைப் போன்றவர்கள் முடிவெடுக்கும் இடத்தில் இல்லை. ஒரமாக நிறுத்தப்பட்டுள்ளோம்.

விவசாயத்துறை அமைச்சர் 'பெயில்'. உரியவகையில் செயற்படக்கூடிய - தகுதியானவர்களுக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட வேண்டும் என்றும் இராஜாங்க அமைச்சர் மேலும் கூறினார்.

## சப்புகஸ்கந்த ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்நிலையில், எதிர்வரும் 26 ஆம் திகதி எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்தை மீண்டும் திறக்க முடியும் என வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

எரிபொருள் சுத்திகரிப்பு நிலையம் இவ்வாறு மூடப்பட்டாலும், நாட்டில் எரிபொருளுக்கு எவ்வித தட்டுப்பாடும் ஏற்படாது என வலுசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

டொலர் தட்டுப்பாட்டால் இதற்கு முன்னரும் எரிபொருள் சுத்திகரிப்பு நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## இரு பிள்ளைகளை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அந்தச் சிறுவர்களை நிர்வாணமாக்கி, அவர்களது முகத்திலும் உடலிலும் மிளகாய்த்தூளைப் பூசி, அவர்களது வீட்டுக்கு முன்பாகவுள்ள மரத்தில் கட்டி வைத்தமை தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமையவே சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அந்தச் சந்தர்ப்பத்தில் குழந்தைகள் அழுவதைப் பார்த்துக்கொண்டிருக்க முடியாமல் அயலவர்கள் அவர்களைக் காப்பாற்றியுள்ளனர்.

மது போதையில் இருந்த குறித்த நபர் தனதுமனைவிமற்றும்குழந்தைகளைப் பலமுறை தாக்கினார் எனவும், தனது மனைவியைத் தாக்கியதில் அவரின் கை முறிந்து அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த சிறுவர்கள் இருவரும் விறகுக் கட்டு ஒன்றைத் திருடினர் எனவும், அதற்கே இவ்வாறு தண்டனை வழங்கப்பட்டது எனவும் குறித்த சிறுவர்களின் தந்தை பொலிஸில் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு துன்புறுத்தல்களுக்குள்ளான சிறுவர்கள் இருவரும் சிகிச்சைக்காக டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும் ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

## மலையக மாணவன்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
துல்லியமாக அடையாளம் காட்டி அவர் இந்தச் சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

எவ்வித அடையாளங்களோ அல்லது எந்தவிதமான எழுத்துக்களோ இல்லாத நிறங்களில் மட்டும் நாடுகள் அடையாளப்படுத்தப்பட்ட உலக வரைபடத்தில் லவ்னீஷ் இந்தச் சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

இவ்வாறு உலக நாடுகளை அடையாளம் காட்டுவதற்காக லவ்னீஷ், 3 நிமிடங்கள் மற்றும் 16 செக்கன்களை மட்டுமே எடுத்துக்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவரது தந்தை ஒரு கணினி போதனாசிரியர் என்பதுடன், தாய் லிந்துலை - தலவாக்கலையின் மருத்துவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது கொட்டகலை பிரதேசத்தில் வசித்து வரும் லவ்னீஸ் ஹட்டன் ஹைலன்ஸ் கல்லூரியில் கல்வி கற்று வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

5 வயது 7 மாதங்கள் 27 நாட்களில் அவர் இந்தச் சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

கடந்த 2018ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30ஆம் திகதி இந்தச் சாதனை நிகழ்த்தப்பட்ட போதிலும், உலக சாதனைப் புத்தகத்தில் நேற்றைய தினமே இது அங்கீகரிக்கப்பட்டது.

## சமலுக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அமைச்சரவை மறுசீரமைப்பின் போது , விவசாயத்துறை அமைச்சை தனது மூத்த சகோதரர் சமல் ராஜபக்சவுக்கு வழங்க ஜனாதிபதி உத்தேசித்திருந்தார்.

'உழவு இலங்கை பயிர் செய்கை போர்' திட்டத்தை அவரின் தலைமையில் செயற்படுத்தவும் திட்டமிடப்பட்டிருந்தது.

எனினும், தற்போதைய சூழ்நிலையில் விவசாயத்துறை அமைச்சை ஏற்க சமல் ராஜபக்ஷ மறுத்துள்ளார்.

விவசாயத்துறை அமைச்சராக செயற்படும் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே கடும் விமர்சனத்துக்கு உள்ளாகியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## வாகன ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இடம்பெற்றுள்ளன. அவற்றில் 2 ஆயிரத்து 461 பேர் உயிரிழந்துள்ளனர். 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம்-
076 443 8622

"INNOVATIVE IDEAS OPEN NEW WORLD"
TECHNO WORLD
தொழில்நுட்பக் கல்லூரி
A/L தொழில்நுட்பப்பிரிவு
இறுதிச் செயலமர்வு - 2021
(Techno World இனால் நடாத்தப்படும் மாபெரும் இறுதிக் கருத்தரங்கு)
சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்
06,07,08,09 and, 10 JANUARY 2022
தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம்
ஆசிரியர்கள்
ராகவன்(B.sc)
முருகநிரோயன்(B.sc)
நிரோஜன்(B.sc)
உமாகாந்தன்(BIT)
" காலை 9.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணிவரை "
அனைத்து மாணவர்களும் பங்கு பெறலாம்
இடம் - வெலிங்டன் சந்தி அருகாமை, யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு
0770175346

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## முக்கிய அமைச்சரவை இன்று

**புதிய ஆண்டில் நாட்டின் அமைச்சரவை இன்று முதல் தடவையாகக் கூடுகின்றது. இன்று மாலை இந்த இதழ் வெளியாகும் சமயத்தில் நாட்டின் அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்.**

**பல தடவைகள் இப்பத்தியில் நாம் சுட்டிக்காட்டியிருக்கும் நாட்டின் மோசமான நெருக்கடிகள் குறித்து தீர்மானகரமான – தீர்க்கமான – சில முடிவுகளை அமைச்சரவை தனது இன்றைய கூட்டத்தில் எடுக்க வேண்டியிருக்கும் என்பது எதிர்பார்க்கப்படும் விடயம்.**

**பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுப்பதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாடுவதா – அதனிடம் பொருளாதார ரீதியாக சரணமடைவதா – என்பது குறித்து இன்றைய அமைச்சரவைக் கூட்டத் தில் விவாதித்து முடிவு செய்யப்படும் என எதிர்வு கூறப் பட்டது.**

**அந்த விடயம் பற்றிய விவாதத்துக்காக இன்றைய அமைச்சரவைக் கூட்டத்துக்கு மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், நிதி அமைச்சினதும் திறைசேரியினதும் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல ஆகியோர் விசேடமாக அழைக்கப்படுவர் என்றும் கூறப்பட்டது.**

**வருட இறுதி வாரத்துக்குரிய – முந்திய – அமைச்சரவைக் கூட்டம் நடைபெறாத நிலையில், இன்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் சர்வதேச நாணய நிதி விவகாரம் பெரும்பாலும் ஆராயப்படும் என எதிர்பார்க்கப்பட்டது.**

**ஆனால், இன்றைய அமைச்சரவைக் கூட்டத்துக்கு மத்திய வங்கி ஆளுநரும், நிதி அமைச்சின் செயலாளரும் அழைக்கப்பட்டிருக்கவில்லை என்று இன்று காலை வெளியான செய்திகள் தெரிவித்தன. அவர்கள் இல்லாமலேயே சர்வதேச நாணய நிதிய விவகாரம் குறித்து இன்று அமைச்சரவை முடிவு செய்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.**

**பொருளாதார நெருக்கடிகளையும் பின்னடைவுகளை எதிர்கொள்வதற்காக தீவிரமான நடவடிக்கைகள் சிலவற்றை அரசு எடுப்பது தவிர்க்க முடியாத கட்டாய மாக இருக்கும்.**

**”இதுவரை நாம் எதிர்கொண்ட தடைகளைக் கடந்து புதிய பயணத்தை மேற்கொள்ளத் தயாராக உள்ளேன். அதற்காகக் கடுமையான முடிவுகளை எடுக்க வேண்டி ஏற்பட்டாலும் அதற்கும் நான் தயாராகவுள்ளேன்” – என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தமக்கு பௌத்த சங்க சபாவினால் வழங்கப்பட்ட விருதை ஏற்றுக் கொண்டு உரையாற்றிய சமயம் குறிப்பிட்டமை கவனிக் கத்தக்கது. அதே போன்ற கருத்தை அவர் தமது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியின் இடையேயும் கோடி காட்டியிருக்கின்றமையும் முக்கியமானது.**

**கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்ததும் அதிரடியாக வரி விதிப்புகள் பலவற்றைத் தளர்த்தி, அரசியல் ஆரவாரம் பண்ணினார். அதனால் நாட்டுக்கு பெரும் வருவாய் இழப்பு ஏற்பட்டது. நாட்டின் இப்போதைய நிதி நெருக்கடிக்குப் பின்னணியான காரணங்களில் இதுவும் ஒன்று எனப் பொருளாதார நிபுணர்கள் கூறுகின்றனர்.**

**இந்தப் பின்புலத்தில் பொருள்கள் மற்றும் சேவை வரியை (ஜி.எஸ்.ரி.) மீண்டும்அறிமுகப்படுத்தும் யோசனை ஒன்றும் –**

**தற்போது 15 வீதமாகஇருக்கும் பெறுமதிசேர்வரியை (வற்வரியை) மேலும் மூன்று வீதத்தினால் அதிகரித்து 18 வீதமாக்கும் யோசனை ஒன்றும் –**

**இன்றைய அமைச்சரவைக் கூட்டத்தில்ஆராயப்படலாம் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.**

**வெளிநாடு சென்றிருந்த நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நாடு திரும்பி இன்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் பங்குபற்றும் நிலையில், நாட்டின் மோசமடைந்துள்ள பொருளாதார நிலைமைகளைத் தூக்கி நிறுத்தும் பல திட்டங்கள் – யோசனைகள் – உத்திகள் – குறித்து இன்று ஆராய்ந்து முடிவுகள் எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.**

# மீண்டும் ஏற்பட்ட சந்தர்ப்பத்தை தலைவர்கள் நழுவவிடக்கூடாது!

## சிவசக்தி ஆனந்தன் வலியுறுத்து



தமிழின விடுதலைக்கான போராட்டத்தில் பல்வேறு சந்தர்ப்பங்கள் எமக்கு ஏற்பட்டுள்ள போதும் அவை நழுவவிட்டமைதான் கடந்த கால வரலாறாக உள்ள நிலையில், தற்போது மீண்டுமொரு சந்தர்ப்பம் உருவாகியுள்ள நிலையில் அதனை நழுவ விட்டுவிடக்கூடாது என்று ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் சிவசக்தி ஆனந்தன் பகிரங்கமான வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

குறித்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ள அவர் –

இலங்கை அரசாங்கம் தற்போது பொருளாதார நெருக்கடிக்குள் சிக்குண்டுள்ளது. அதேநேரம், ஆட்சியாளர்களின் பங்காளிகளுடனும் அரசியல் ரீதியான முரண்பாடுகள் ஏற்பட்டிருக்கின்றன. சிங்கள, பௌத்தக் கோட்பாட்டின் மீது நம்பிக்கை வைத்து வாக்களித்த 69 லட்சம் தென்னிலங்கை மக்களே ஆட்சியாளர்களை திட்டித்தீர்க்கின்ற அளவிற்கு வெறுப்பைக் காறி உமிழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

இவ்வாறான நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு ஆட்சியாளர்கள் இந்தியா, சீனா, அமெரிக்கா என்று தமக்காக திறக்கப்படும் என்ற நம்பிக்கையில் உள்ள அனைத்துக் கதவுகளையும் தட்ட ஆரம்பித்துள்ளார்கள். ஆனால் இலங்கையை மையப்படுத்தி ஏற்பட்டிருக்கும்பூகோளப்போட்டியின்பங்குதாரர்களான இந்தியா, சீனா, அமெரிக்கா ஆகியன தன்னலன்களை மையப்படுத்தி காய்களை நகர்த்த ஆரம்பித்துள்ளன.

இதில் அமெரிக்கா, இந்தியாவை முன்னிலைப்படுத்திய நகர்வை இலங்கை விடயத்தில் கையாள்கின்றது. அதேபோன்றே ஏனைய மேற்குலக நாடுகளும் அவ்விதமான நகர்வையேபின்பற்றுகின்றன. இந்நிலையில் இந்தியாவிடமிருந்து இலங்கை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான கடன்களைப்பெறுவதற்குத்தயாராகியுள்ளது.

மறுபக்கத்தில் சீனாவிடத்திலும் கடன்களை, நன்கொடைகளைப் பெறுவதற்குத் தயாராகி வருகின்றது.

இந்தப் பின்னணியில், எதிர்வரும் எட்டாம், ஒன்பதாம் திகதிகளில் சீன வெளிவிவகாரங்களுக்கான அமைச்சர் வாங் யி இலங்கைக்கு வருகின்றார். அவர் இலங்கைக்கும், சீனாவுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகள் ஸ்தாபிக்கப்பட்டு 65 ஆவது ஆண்டுக் கொண்டாட்டத்தில் பங்கேற்பதையே பிரதான விடயமாகக் கொண்டிருக்கின்றார்.

அதேநேரம், நிதி அமைச்சர் பஷில் ராஜபக்ஷ, ஒன்பதாம் திகதி இந்தியாவுக்குச் செல்வதற்குத் தயாராகி வருகின்றார். குஜராத்தில் நடைபெறும் மாநாட்டில் பங்கேற்பது காரணமாகக் கூறப்பட்டாலும், பிரதமர் மோடியைச் சந்திப்பது, இந்தியாவிடமிருந்து பெறக்கூடிய டொலர்களை விரைவுபடுத்துவது என்பன அந்தப் பயணத்தின் பின்னணிகளாக உள்ளன.

இவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள கட்சிகளும், ஏனைய முஸ்லிம், மலையகக் கட்சிகளும் இணைந்து தமிழ் பேசும் கட்சிகளாக பிரதமர் மோடிக்கு அனுப்பவுள்ள ஆவணத்தை விரைவுபடுத்த வேண்டியுள்ளது.

மேற்படி ஆவணத்ரத அனுப்புவதன் ஊடாக, இந்தியா, இலங்கை மீதான தனது பிடியை உறுதிப்படுத்தும் அதேநேரம், அதன் பயனாக ஆகக்குறைந்தது இந்திய – இலங்கை ஒப்பந்தத்தையாவது முழுமையாக நடைமுறைப்படுத்த முடியும். அதிகாரப் பகிர்வுக்கான முதற்படியாக அரசமைப்பில் கூறப்பட்டுள்ள 13 ஆவது திருத்தச் சட்டத்தைப் பாதுகாப்பதற்கும், நடைமுறைப்படுத்துவதற்கும் இயலுமானதாக இருக்கும்.

தற்போது ஏற்பட்டுள்ள பூகோள, பிராந்திய அரசியல், இராஜதந்திர மூலோபாயச் சூழலை உணர்ந்து கொள்ளாது வாய்ப்பை நழுவ விட்டால் தமிழினத்தின் எதிர்காலம் மேலும் மோசமடைவதற்கான வாய்ப்புக்களே அதிகமுள்ளன.

எனவே குறிப்பறிந்து, தீர்க்கமான தீர்மானத்தை எடுக்கும் அதேநேரம், தொடர் தாமதங்களைத் தவிர்த்து மிகமிக விரைவாக கூட்டு ஆவணத்தை ஏகோபித்து பிரதமர் மோடிக்கு அனுப்பிவைக்க வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# ஒமிக்ரோன் பேராபத்து 2வாரங்களில்வரலாம்!

## அன்வர் ஹம்தானி எச்சரிக்கை

இலங்கையில் அடுத்து வரும் வாரங்களில் ஒமிக்ரோன் முன்னணி கொவிட் மாறுபாடாக மாறக்கூடும் என சுகாதார அமைச்சின் கொவிட் தலைமை ஒருங்கிணைப்பாளர் வைத்தியர் அன்வர் ஹம்தானி எச்சரிக்கை விடுத்துள்ளார். இந்நிலையில் வெளிநாட்டு பயணிகளுக்கு விமான நிலையத்தில் நடத்தப்படும் அன்டிஜென் பரிசோதனையில் கொவிட் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டு, அவர்களின் உயிரியல் மாதிரிகள் மரபணு சோதனைக்கு அனுப்பப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொவிட் மாறுபாடுகளைக் கண்டறிய மரபணு சோதனை பயன்படுத்தப்படுகிறதென அவர் கூறியுள்ளார். இந்த நிலையில் ஒமிக்ரோன் மாறுபாடு டெல்டா வைரஸை விட மூன்று மடங்கு வேகமாகப் பரவுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன என ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார். கொழும்பு, கம்பஹா, அநுராதபுரம் மற்றும் பதுளை மாவட்டங்களில் இதுவரை 48 ஒமிக்ரோன் தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர். பாதிக்கப்பட்ட 48 பேரில் ஒருவர் மாத்திரம் அநுராதபுரம் மாவட்டத்தில் கண்டறியப்பட்டுள்ளார், மீதமுள்ள 47 பேர் கொழும்பு, கம்பஹா மற்றும் பதுளை மாவட்டங்களில் கண்டறியப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் வெளிநாடுகளில் இருந்து வந்தவர்களும், அவர்களுடன் நெருங்கி செயற்பட்டவர்களும் ஆவர் எனவும் தெரியவந்துள்ளது. அவர்கள் தற்போது தனிமைப்படுத்தல் மையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

நாட்டில் ஒமிக்ரோன் பரவி வருவதால், கொவிட் நோய்த்தடுப்பு தடுப்பூசியின் மூன்றாவது தடுப்பூசி எடுத்துக்கொள்வதும் முக்கியம். இதேவேளை, பண்டிகைக் காலங்களில் மக்களின் செயற்பாடு காரணமாக அடுத்த இரண்டு வாரங்களுக்குள் கொவிட் நோய் பரவும் அபாயம் காணப்படுவதாக சுகாதார நிபுணர் வைத்தியர் மல்காந்தி கல்ஹேன தெரிவித்துள்ளார். சுகாதார வழிகாட்டுதல்களை மீறி மக்கள் வணிக வளாகங்களுக்குச் செல்வதாலும், உல்லாசப் பயணங்களுக்குச் செல்வதாலும் கொவிட் வேகமாகப் பரவக்கூடும் என விசேட மருத்துவர் வலியுறுத்தினார்.

# தென்னாபிரிக்கா நாடாளுமன்ற வளாகத்தில் பாரிய தீ விபத்து



தென்னாபிரிக்காவின் சட்டப் பேரவைத் தலைநகர் கேப்டவுனில் உள்ள நாடாளுமன்ற வளாகத்தில் பெரும் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

கட்டடத்தின் மேற்கூரையில் இருந்து பெரும் தீப்பிழம்புகள் வெளியேறி, வானத்தை நிரப்பும் கரும் புகையை வீடியோ காட்சிகள் காட்டுகிறது.

தீ விபத்துக்கான காரணம் இன்னும் உறுதி செய்யப்படவில்லை. பேராயர் டெஸ்மண்ட் டுட்டுவின் இறுதிச் சடங்கு நாடாளுமன்றத்திற்கு அருகிலுள்ள செயின்ட் ஜார்ஜ் கதீட்ரலில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற சில மணி நேரங்களுக்குப் பிறகு இந்த தீ விபத்து ஏற்பட்டது.

கூரை தீப்பிடித்துள்ளது மற்றும் தேசிய சட்டமன்ற கட்டிடமும் தீப்பிடித்துள்ளது என்று நகரின் அவசர சேவைகளின் செய்தித் தொடர்பாளர் ஏ.எப்.பி செய்தி நிறுவனத்திடம் தெரிவித்தார்.

தீ கட்டுக்குள் வரவில்லை என்றும் கட்டிடத்தின் சுவர்களில் விரிசல் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்

## பிரிட்டனின் முன்னாள் பிரதமருக்கு 'சா' பட்டம்



பிரிட்டன் முன்னாள் பிரதமா ரோனி பிளேருக்கு 'சா' பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பிடிஜ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளதாவது:

ரோனி பிளேருக்கு பிரிட்டன் அரசி எலிசபெத் மாவீரா விருது வழங்கியுள்ளார். 'ஆர்டா ஆஃப் கார்ட்டா' உறுப்பிராக ரோனி பிளேரை அரசி எலிசபெத் நியமித்துள்ளார். பிரிட்டனின் மிகப் பழையதும் முதன்மையானதுமான இந்த விருது, 1348 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. சிறந்த சமுதாய சேவை ஆற்றியவாகளுக்கு இந்த விருது வழங்கப்பட்டு வருகிறது.

இந்த விருதைப் பெற்றன் மூலம் ரோனி பிளேயா, இனி 'சா டோனி பிளோ' என்று சனிக்கிழமை முதல் அழைக்கப் படுவார் என்று பிடிஜ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

## காசிம் சுலைமானி கொலை விவகாரம்–

## அமெ. மீது நடவடிக்கை வேண்டும் ஈரான் ஐக்கிய நாடுகளிடம் கோரிக்கை



காசிம் சுலைமானி கொல்லப்பட்ட விவகாரத்தில் அமெரிக்கா மீது ஐக்கிய நாடுகள் சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஈரான் அழைப்பு விடுத்துள்ளது. இரண்டு வருடங்களுக்கு முன்னர் பக்தாத்தில் தூதரகப் பணியில் இருந்தபோது, அமெரிக்காவின் ஆளில்லா விமானத் தாக்குதலில் அவர் உயிரிழந்தார்.

இந்த விடயத்தில் அமெரிக்க அரசாங்கத்தைக் கண்டிக்க ஈரானின் ஜனாதிபதி அலுவலகத்தின் சட்டப் பிரிவு, ஐ.நா பொதுச் சபைக்கு கடிதம் அனுப் பியுள்ளது. அமெரிக்க அரசாங்கங்கள், பல ஆண்டுகளாக, சர்வதேச சட்டங்கள் மற்றும் உடன்படிக்கைகளை மீறும் அதிகாரத்தை ஒருதலைப்பட்சமாக வழங்கப்பட்டுள்ளதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இன்று ஜனவரி 3 ஆம் திகதி சுலைமானி கொல்லப்பட்டதன் இரண்டாம் ஆண்டு நினைவு தினம் இடம்பெற்றுள்ள நிலையில் குறித்த கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.




## நைஜீரியாவில் கடத்தல்காரர்கள் சுட்டுக்கொலை!

நைஜீரியாவில் ஆதிக்கம் செலுத்தி வரக்கூடிய பல்வேறு ஆயுத குழுக்கள் மாணவ–மாணவிகளைக் கடத்திவைத்துக்கொண்டு அவர்களின் பெற்றோரிடம் இருந்து பிணை தொகை பெறுவதை வழக்கமாக கொண்டுள்ளனர். இந்த ஆள்கடத்தல்காரர்களை வேட்டையாட இராணுவம் தீவிரமாக செயல்பட்டு வருகிறது.

இந்தநிலையில் நைஜீரியாவின் தெற்கு பகுதியில் உள்ள ஓச்சான் என்கிற வனப்பகுதிக்குள் கடத்தல்காரர்கள் பலர் பதுங்கி இருக்கின்றனர் என இராணுவத்துக்கு இரகசிய தகவல் கிடைத்தது. அதன் பேரில் அங்கு தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்ட இராணுவத்தினர், பதுங்கியிருந்த கடத்தல்காரர்களை சுற்றிவளைத்து துப்பாக்கிச்சூடு நடத்தினர்.

இதில் கடத்தல்காரர்கள் 10 பேர் கொல்லப்பட்டனர். 5 பேர் கைது செய்யப்பட்டனர். இன்னும் சில கடத்தல்காரர்கள் துப்பாக்கி குண்டு காயங்களுடன் தப்பி ஓடி விட்டனர்.

## கோட்டைத் தாண்டினால் பேரழிவு – சீனாவிற்கு தாய்வான் எச்சரிக்கை



இராணுவ மோதல்கள் தீர்வாகா என குறிப்பிட்டுள்ள தாய்வான் ஜனாதிபதி, சிவப்புக் கோட்டைத் தாண்டினால் அது ஆழமான பேரழிவிற்கு வழிவகுக்கும் என சீனாவிற்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தாய்வானை ஜனநாயக ரீதியில் ஆளுவதாக சீனா உரிமை கோரிவரும் நிலையில் கடந்த இரண்டு ஆண்டுகளில் இராணுவ மற்றும் இராஜதந்திர அழுத்தங்களை அதிகரித்துள்ளது.

இந்நிலையில் தாய்வான் மக்களுக்குப் புத்தாண்டை முன்னிட்டு விசேட உரையாற்றிய ஜனாதிபதி சாய் இங்–வென், பெய்ஜிங் அதிகாரிகள் நிலைமையைத் தவறாக மதிப்பிடக் கூடாது என குறிப்பிட்டார்.

மேலும் தங்களது எல்லைப் பகுதியில் சீன இராணுவ விமானங்களின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றும் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இராணுவ வழிமுறைகளைப் பயன்படுத்துவதில் தமக்கு விருப்பம் இல்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

சமீபத்திய மாதங்களில் தாய்வானின் வான் பரப்பில் சீன யுத்த விமானங்களின் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன. இருப்பினும் அச்சுறுத்தல்களுக்கு அடிபணியப்போவதில்லை என தாய்வான் தெரிவித்துள்ளது.



# 14 நாள்களுக்குப் பின்னர் மீன்பிடிக்க கடலுக்குச் சென்ற ராமேஸ்வரம் மீனவர்கள்

இலங்கைக் கடற்படையைக் கண்டித்து வேலை நிறுத்தம் செய்த ராமேஸ்வரம் மீனவர்கள் 14 நாள்களுக்குப் பிறகு இன்று மீன்பிடிக்க கடலுக்குச் சென்றுள்ளனர்.

எல்லை தாண்டி மீன்பிடித்ததாகக் கூறி தமிழகத்தைச் சேர்ந்த 68 மீனவர்களை கைது செய்த இலங்கை கடற்படையினர் அவர்களை சிறையில் அடைத்தனர். இதையடுத்து ராமேஸ்வரம் மீனவர்கள் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம், உண்ணாவிரதம் போராட்டம் உள்ளிட்ட பல்வேறு போராட்டங்களை நடத்தினர். இதனால் கடந்த 11 நாள்களாக கடலுக்குச் செல்லாமல் தொடர்ச்சியாக வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில் கடந்த 30 ஆம் திகதி மாவட்டஆட்சியர்அலுவலகத்தில்ஆட்சியருடன் நடந்த பேச்சுவார்த்தையில் வெளியுறவுத்துறை அமைச்சரைச் சந்திக்க ஏற்பாடு செய்யப்படும் என்று மாவட்ட ஆட்சியர் உறுதி அளித்ததையடுத்து, மீனவர்கள் தங்களது வேலை நிறுத்தப் போராட்டத்தை வாபஸ் பெற்று மூன்றாம் திகதி கடலுக்குச் செல்வோம் என்று அறிவித்திருந்தனர்.

ஆதன்படி இன்று மீன்வளத்துறை அதிகாரிகளிடம் மீன் பிடிப்பதற்கான அனுமதிச் சீட்டைப் பெற்ற மீனவர்கள் அத்தியாவசிய பொருட்களை தங்களுடைய படகுகளில் ஏற்றிக்கொண்டு 14 நாட்களுக்குப் பிறகு 500க்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் கடலுக்கு மீன் பிடிக்கச் சென்றுள்ளனர்.





# சிறுவர்களுக்கும் கொரோனா தடுப்பூசி இந்தியா முழுவதும் நடவடிக்கை ஆரம்பம்

இந்தியாவில் கடந்த ஆண்டு ஜனவரி 16 ஆம் திகதி சிறுவர்களுக்கு கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் பணி தொடங்கியது. முதலில் சுகாதார பணியாளர்கள், முன்களப் பணியாளர்கள், 60 வயதுக்கு மேற்பட்டோர் ஆகியோருக்கு முன்னுரிமை அடிப்படையில் தடுப்பூசி போடப்பட்டது. பல கட்டங்களாக செயற்படுத்தப்பட்ட தடுப்பூசித் திட்டத்தில் தற்போது 18 வயதான அனைவருக்கும் தடுப்பூசி செலுத்தப்படுகிறது.

இதற்கிடையே, தென்னாபிரிக்காவில் கடந்த நவம்பர் மாதம் 24 ஆம் திகதி முதன்முதலாக தென்பட்ட உருமாறிய கொரோனாவான ஒமிக்ரோன் வைரஸ் உலகமெங்கும் பரவத்தொடங்கியது. இந்தியாவையும் இந்த வைரஸ் விட்டு வைக்காததையடுத்து இதுவரை தடுப்பூசித் திட்டத்தின் கீழ் வராத சிறுவர்களுக்கும் தடுப்பூசி போடவேண்டும் என்றும் இதேபோன்று மற்ற பெரியவர்களுக்கு பூஸ்டர் டோஸ்தடுப்பூசியும்செலுத்தப்பட வேண்டும் என்றும் கோரிக்கைகள் வலுத்தன.

இந்தநிலையில், இந்தியா முழுவதும் 15 முதல் 18 வயது வரையிலான சிறுவர்களுக்கு கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் பணி இன்று காலை ஆரம்பமாகியது. சிறுவர்களுக்கு தடுப்பூசி செலுத்துவதற்கு தனியாக மையங்களை அமைக்கும்படி மாநிலங்களையும், யூனியன் பிரதேசங்களையும் இந்திய மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

# இந்தியா முழுவதும் புதிதாக 33,750 பேருக்கு தொற்று மூன்று மாநிலங்களில் அதிவேகத்தில் கொரோனா!

இந்தியாவில் கொரோனா பரவல் மீண்டும் வேகம் எடுத்துள்ள நிலையில், புதிதாக 33 ஆயிரம் பேருக்கு மேல் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தரவுகள் தெரிவிக்கின்றன.

இதுதொடர்பாக இந்திய மத்திய சுகாதாரத்துறை இன்று காலை வெளியிட்ட அறிக்கையில், காலை 8 மணி வரையிலான கடந்த 24 மணி நேரத்தில் புதிதாக 33,750 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகக் கூறியுள்ளது.

இது நேற்று முன்தினத்துடன் ஒப்பிடுகையில் சுமார் 21 சதவீதம் அதிகமாகும் எனவும் மொத்த பாதிப்பு 3 கோடியே 49 லட்சத்து 22 ஆயிரத்து 882 ஆக உயர்ந்துள்ளது எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று அதிகபட்சமாக மகாராஷ்டிராவில் 11,877 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அங்கு ஒரேநாளில் பாதிப்பு 29 சதவீதம் அதிகரித்துள்ளது. இந்தியத் தலைநகர் மும்பையில் மட்டும் புதிதாக 8,063 பேருக்கு தொற்று உறுதியாகி உள்ளது.

மேற்கு வங்கத்தில் நேற்று 6,153 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் அதிகபட்சமாக கொல்கத்தாவில் மட்டும் 3ஆயிரத்து 194 பேருக்கு தொற்று உறுதியானது. மேற்கு வங்கத்தில் கொரோனா பரவல் சதவீதம் 15.93 ஆக உயர்ந்துள்ளது. டெல்லியில் நேற்று முன்தினம் பாதிப்பு 2 ஆயிரத்து 716 ஆக இருந்த நிலையில், நேற்று 17 சதவீதம் உயர்ந்து புதிதாக 3ஆயிரத்து194 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கர்நாடகாவில் இரண்டாவது நாளாக நேற்றும் பாதிப்பு ஆயிரத்தைத் தாண்டியது. அங்கு புதிதாக 1,187 பேருக்கு தொற்று கண்டறியப்பட்டது. தமிழ்நாட்டில் 1,594 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஒரு வாரத்தில் இந்தியா முழுவதும் புதிதாக 1.3 லட்சம் பேருக்கு தொற்று கண்டறியப்பட்டுள்ளது. கடந்த 12 வாரங்களில் இல்லாத அளவில் அதிகபட்ச பாதிப்பாக இது அமைந்துள்ளது என்று மருத்துவ அறிக்கைகள் உறுதிப்படுத்துகின்றன.

இந்திய மருத்துவ ஆராய்ச்சி மையத்தின் தகவல்படி, நேற்று 8லட்சத்து 78 ஆயிரத்து 990 மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டுள்ளன. மொத்த பரிசோதனை எண்ணிக்கை 68.09 கோடியாக அதிகரித்துள்ளது.



# சாட்டை துரைமுருகன் மீது குண்டர் சட்டத்தில் நடவடிக்கை

சமூக வலைத்தளங்களில் தவறான தகவல்களைப் பரப்பியதாக தமிழகத்தைச் சேர்ந்த யூ டியூபர் சாட்டை துரைமுருகன் கடந்த 19 ஆம் திகதியன்று திருச்சியில் கைதுசெய்யப்பட்டார்.

8 பிரிவுகளில் அவர் மீது திருவள்ளூர் பொலிஸார் வழக்குப்பதிவு செய்த நிலையில், நீதிமன்ற உத்தரவுப்படி சாட்டை துரைமுருகன் சிறையில் அடைக்கப்பட்டார்.

இந்த நிலையில் அவரை குண்டர் தடுப்புச் சட்டத்தில் கைதுசெய்ய, மாவட்ட எஸ்.பி. வருண்குமார் பரிந்துரைத்தார். அதன்பேரில் திருவள்ளூர் ஆட்சியர் ஆல்பி ஜான் வர்கீஸ் உத்தரவிட்டதைத் தொடர்ந்து, சாட்டை துரைமுருகன் திருவள்ளூர் கிளைச் சிறையிலிருந்து புழல் சிறைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

# திருகோணமலையில் படுகொலை செய்யப்பட்ட 5 மாணவர்களின் 16ஆவது நினைவஞ்சலி அனுஷ்டிப்பு



கடந்த 2006 ஆம் ஆண்டு திருகோணமலை கடற்கரைக்கு முன்பாக சுட்டுக் கொல்லப்பட்ட ஐந்து மாணவர்களில் 16ஆவது நினைவஞ்சலி நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. நேற்று திருகோணமலை கடற்கரைக்கு முன்னால் காந்தி சிலை சுற்று வட்டத்தில் சுட்டுக் கொலை செய்யப்பட்ட மாணவர்களின் உறவினர்கள் நண்பர்கள் மற்றும் திருகோணமலை மாவட்ட உணர்வாளர்களின் பங்களிப்புடன் அமைதியான முறையில் விளக்கேற்றி மலரஞ்சலி செலுத்தப்பட்டது

இவ்வாறு படுகொலை செய்யப்பட்ட திருகோணமலை கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் 5 மாணவர்கள் உள்ளடங்களாக 7 மாணவர்கள் சுடப்பட்டு 5 மாணவர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்த நிலையில் இரண்டு மாணவர்கள் உயிர் தப்பியிருந்தனர்.

அன்றைய நாள் திருகோணமலை மண்ணில் கறுப்பு தினமாக அனுஷ்டிக்கபட்டிருந்தது இவ்வாறு உயிரிழந்த 5 மாணவர்களும் 2005ஆம் ஆண்டு உயர்தரத்தில் பரிட்சை எழுதி பெறுபேறுக்காகக் காத்திருந்த வேளையில் திருகோணமலை நகரை அண்டிய கடற்கரைக்கு முன்னால் சுட்டுக் கொலை செய்யப்பட்டனர்.

படுகொலை செய்யப்பட்ட மாணவர்களின் பெற்றோர்களினால் வழக்கு தொடரப்பட்டு சந்தேகத்தின் பேரில் இலங்கை பாதுகாப்புப் படையின் படை வீரர்கள் கைது செய்யப்பட்டு போதிய சாட்சியங்கள் இல்லை என விடுதலை செய்யப்பட்டிருந்தனர்

இவ்வாறு படுகொலை செய்யப்பட்ட மாணவர்களில் ஒருவரின் தந்தையான வைத்தியர் மனோகரன் என்பவரினால் ஐக்கிய நாடுகள் சபை வரை கொண்டு செல்லப்பட்ட போதிலும் 16 வருடங்கள் கடந்த நிலையில் மாணவர்களுக்கான சரியான நீதி கிடைக்கவில்லை. கடந்த காலங்களில் பாகிஸ்தானில் படுகொலை செய்யப்பட்ட பெரும்பான்மை சமூகத்தை சேர்ந்த சகோதரர் ஒருவருக்கு இந்த அரசு மிகுந்த பிரயத்தனம் மேற்கொண்டிருந்தது அந்த உயிருக்கு நியாயம் வேண்டும் என போராடியது குறிப்பிடத்தக்கது.

# வாகனேரிப் பகுதியில் 91மி.மீ. மழை வீழ்ச்சி



வடகீழ் பருவப் பெயற்சி மழை மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த மார்கழி மாதத்தில் சற்று ஓய்ந்திருந்த போதிலும், தை முதலாம் திகதியிலிருந்து மீண்டும் மழை பொழியத் தொடங்கியுள்ளது.

இதனால் மாவட்ட மக்களின் இயல்பு வாழ்வில் சற்று தளம்பல் நிலமை ஏற்பட்டுள்ளதையும் அவதானிக்க முடிகின்றது.

இந்நிலையில் இன்று காலை 8.30 மணி வரையில் கடந்த 24 மணித்தியாலத்தில் மாவட்டத்தில் அதிக மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

இதில் மட்டக்களப்பில் 54.8 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், நவகிரிப்பகுதியில், 66.5 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், தும்பங்கேணிப் பகுதியில் 27.2மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், மைலம்பாவெளியில் 70.0மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், கிரான்பகுதியில் 88.2மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், உன்னிச்சைப் பகுதியில் 25.0மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், உறுகாமம் பகுதியில் 23.7மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், வாகனேரிப் பகுதியில் 91.9 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், கட்டுமுறிவுப் பகுதியில் 30.0மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், பதிவாகியுள்ளதாகவும், கடந்த 2011 மார்கழி 31 வரையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 2254.8 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக வும், மாவட்ட வானிலை அவதான நிலையத்தின் பொறுப்பதிகாரி சு.ரமேஸ் தெரிவித்தார்.

எனினும் மாவட்டத்திலுள்ள சிறிய குளங்கள் நிரம்பியுள்ளதுடன் பெரிய குளங்களின் நீர் மட்டமும் வெகுவாக உயர்ந்துள்ளதாக அக்குளங்களுக்குப் பொறுப்பான நீர்ப்பாசனப் பொறியியலாளர்கள் தெரிவிக்கின்றனர். எனினும், 31அடி கொள்ளளவுடைய நவகிரிக் குளத்தின் நீர் மட்டம் தற்போது 26அடி 4அங்குலமாகவும், 17அடி 25அங்குலம் கொள்ளளவுடைய தும்பங்கேணிக் குளத்தின் நீர்மட்டம் தற்போது 15அடி 2அங்குலமாகவும் உயர்ந்துள்ளது என அக்குளங்களுக்குப் பொறுப்பான நீர்ப்பாசனப் பொறியியலாளர்கள் தெரிவிக்கின்றனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது பெய்து வரும் பலத்த மழை காரணமாக பல உள்ளூர் வீதிகளிலும், வெள்ளநீர் தேங்கியுள்ளதனால் மக்கள் உள்ளூர் போக்குவரத்துக்களிலும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

# ஆசிரியை தற்கொலை

களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வன்னியார் வீதி களுதாவளை பிரதேசத்தைச் சேர்ந்த (வயது-28) கணேசன் சோபாலினி என்பவர் தூக்கிட்டுத் தற்கொலை செய்த சம்பவம் நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது –

புதுவருட தினத்தன்று குறித்த பெண்ணுக்கும் தனது காதலனுக்குமிடையே தொலைபேசியில் ஏற்பட்ட தகறாறினால் வீட்டின் அறையினுள் தனக்குத்தானே சுருக்கிட்டு தற்கொலை செய்த நிலையில் சம்பவத்தைக் கண்ட குடும்பத்தினர் தூக்கிலிருந்து மீட்டெடுத்து அருகில் உள்ள வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற போது யுவதி இறந்துள்ளதை வைத்தியர்கள் உறுதிப் படுத்தினார் எனப் பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

சம்பவம் பற்றிய மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிகுடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அரச உத்தியோகத்தர்களுக்கு 1100 மரக்கன்றுகள் விநியோகம்

சிறிய அளவிலான பயிர்ச்செய்கை ஊக்குவிப்புத்திட்டத்தின்கீழ் மட்டக்களப்பில் கொறுக்காய் மற்றும் மிளகு மரக்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. ஏற்றுமதி விவசாய திணைக்களத்தால் சிறிய அளவிலான பயிர்ச்செய்கை ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் புதுவருடத்தை முன்னிட்டு 750 மிளகுக் கன்றுகளும், 350 கொறுக்காய் மரக்கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

2022 ஆம் ஆண்டுக்கான கடமைச் செயற்பாடுகளை ஆரம்பிக்கும் முதல் நாளான அரச உத்தியோகத்தர்கள் அரச சேவை உறுதியுரை, சத்தியப்பிரமாணம் செய்துகொள்ட நிகழ்வின்போது மாவட்ட அரசாங்க அதிபர் க. கருணாகரனால் மரக்கன்றுகள் உத்தியோகத்தர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் விரிவாக்கல் உத்தியோகத்தர் நர்தனா குகதாசனின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் கே. கருணாகரன், மேலதிக அரசாங்க அதிபர் சுதர்சினி ஸ்ரீகாந், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் சசிகலா புண்ணியமூர்த்தி, மாவட்ட விவசாய மேற்பார்வை உத்தியோகத்தர் சீ.தனிநாயகம், அபிவிருத்தி உத்தியோகத்தர் கேமசந்திரிகா உட்பட மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

இதுதவிர இம்மாவட்ட விவசாயிகளுக்கு இரத்தினபுரி மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களில் உருவாக்கப்பட்ட கொறுக்காய் மரக்கன்றுகள் ஒருவருக்கு 10 என்ற அடிப்படையில் 1500 மரக்கன்றுகள் முதல் தடவையாக பரீட்சாத்தமாக பயிரிட வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



மாங்கல்யா
லக்ஷ்மி நாராயணா
திருமண சேவை
இல.266, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
077 197 1667, 077 316 4796

மணமகள் விவரம்

பிறந்த திகதி - 01.04.1988 மதம் - இந்து
ஜாதி -V பெண் நட்சத்திரம் - உத்தரம் 3
கி.பா - 15 செவ் - 9 இல்
தகைமை - B.Com தொழில் - DO அரசசேவை
எதிர்பார்ப்பு - அரசசேவை மணமகன்

பிறந்த திகதி - 23.11.1991 மதம் - இந்து
ஜாதி -V பெண் நட்சத்திரம் - ரோகிணி 4
கி.பா - 21 செவ் / சூரி 10 இல்
தகைமை - IT Soft ware Eng. தொழில் - Company
எதிர்பார்ப்பு - வெளிநாடு உள்நாடு மணமகன்

பிறந்த திகதி - 21.11.1992 மதம் - இந்து
ஜாதி -V பெண் நட்சத்திரம் - அத்தம்
கி.பா - 13 செவ் 11 இல்
தகைமை - BSc தொழில் - ஆசிரியர்
எதிர்பார்ப்பு - Doctor, Eng.அரச உயர்பதவி மணமகன்

பிறந்த திகதி - 12.08.1993 மதம் - இந்து
ஜாதி -V பெண் நட்சத்திரம் - கார்த்திகை 4
கி.பா - 46 செவ் 5 இல்
தகைமை - BBA, MBA தொழில் - அரசசேவை கொழும்பு
எதிர்பார்ப்பு - அரசசேவை பட்டதாரி கொழும்பில் தேவை

பிறந்த திகதி - 05.03.1993 மதம் - இந்து
ஜாதி -V பெண் நட்சத்திரம் - சுவாதி
கி.பா - 18 செவ் 7 இல்
தகைமை - Business Management தொழில் - Bank Officer
எதிர்பார்ப்பு - பட்டதாரி அரசசேவை மணமகன் சேவை

பிறந்த திகதி - 30.08.1990 மதம் - இந்து
ஜாதி V பெண் நட்சத்திரம் - மூலம்
கி.பா - 30 செவ் 1 இல்
தகைமை - Bsc. Msc தொழில் - ஆராய்ச்சியாளர்
எதிர்பார்ப்பு - அரசபட்டதாரி மணமகன்

பிறந்த திகதி - 02.06.1993 மதம் - இந்து
ஜாதி V பெண் நட்சத்திரம் - விசாகம் 1
கி.பா - 69 செவ் 9 இல்
தகைமை - Bsc Civil Eng. தொழில் - Company
எதிர்பார்ப்பு - பட்டதாரி அரச உயர் பதவி மணமகன்

பிறந்த திகதி - 10.04.1987 மதம் - இந்து
ஜாதி V பெண் நட்சத்திரம் - மகம்
கி.பா - 07 செவ் 5 இல் -
தகைமை - MBBS தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - Doctor மணமகன்

மணமகன் விவரம்

பிறந்த திகதி - 22.09.1989 மதம் - இந்து
ஜாதி -V ஆண் நட்சத்திரம் - மிருகசீரிடம் 3
கி.பா - 17 செவ் /சூரி 12 இல் 6"
தகைமை - Bsc. தொழில் - ஆசிரியர்
எதிர்பார்ப்பு - பட்டதாரி அரசசேவை மணமகள்

பிறந்த திகதி - 13.08.1979 மதம் - இந்து
ஜாதி -V ஆண் நட்சத்திரம் - அச்சுவினி 3
கி.பா - 48 செவ் 5 இல்
தகைமை - Bsc, Msc தொழில் - UK மணமகன்
எதிர்பார்ப்பு - UK+ இலங்கை பட்டதாரி மணமகள் தேவை.

பிறந்த திகதி -28.01.1991 மதம் - இந்து
ஜாதி -V ஆண் நட்சத்திரம் - திருவாதிரை
கி.பா - 31 செவ் 1 இல்
தகைமை - MBBS தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - Doctor,Eng. மணமகள்

பிறந்த திகதி - 04.09.1992 மதம் - இந்து
ஜாதி -V ஆண் நட்சத்திரம் - கேட்டை 4
கி.பா - 15 செவ் 2 இல்
தகைமை - GCE A/L தொழில் - Company work
எதிர்பார்ப்பு - A/L மணமகள் காரைநகர் முன்னுரிமை

பிறந்த திகதி - 25.01.1989 மதம் - இந்து
ஜாதி -V ஆண் நட்சத்திரம் - ஆயிலியம்
கி.பா - 33 செவ் 12 இல்
தகைமை - GCE A/L, HNDA தொழில் - கடை உரிமையாளர்
எதிர்பார்ப்பு - A/L படித்த மணமகள் காரைநகர் முன்னுரிமை

பிறந்த திகதி - 10.03.1988 மதம் - இந்து
ஜாதி -V ஆண் நட்சத்திரம் - உத்தரம் 4
கி.பா - 5 செவ் 9 இல்
தகைமை - GEC A/L தொழில் - Company உரிமையாளர்
எதிர்பார்ப்பு - A/L படித்த மணமகள்

பிறந்த திகதி - 21.11.1989 மதம் - இந்து
ஜாதி -V ஆண் நட்சத்திரம் - மகம்
கி.பா - 23 செவ் 1 இல்
தகைமை - CIMA Complete தொழில் - சொந்த நிறுவனம்
எதிர்பார்ப்பு - வெளிநாடு, உள்நாடு மணமகள்

பிறந்த திகதி - 10.08.1981 மதம் - இந்து
ஜாதி -V ஆண் நட்சத்திரம் - கேட்டை
கி.பா - 44 செவ் 12 இல்
தகைமை - GCE A/L தொழில் - சொந்த நிறுவனம்
எதிர்பார்ப்பு - A/L படித்த மணமகள்

Australia, Canada, UK, USA,Swiss, Germany, Italy, France, Newzelan- இந்த நாடுகளில் Visa உள்ளவர்கள் இல்லாதவர்கள் மணமகன் மணமகள் விவரம் தந்தால் திருமணம் நிறைவேற்றித் தருவோம்.
காலைக்கதிர் தொலைபேசி 021 222 3000
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வெளிவரும் இம் மாங்கல்யா பகுதியில் மணமக்கள் விவரங்கள் பிரசுரிக்க விரும்பின் பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

சொர்க்கம்
திருமண சேவை
இல.102/ A , பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

மணமகன் விபரம்

பிறந்த திகதி - 21.08.1987 மதம் - இந்து
ஜாதி - N ஆண்
நட்சத்திரம் - புனர்பூசம் 4ம் பதம்
கி.பா - செவ் - 7 இல் சூரிய செவ்வாய்
தகைமை - BA
தொழில் - ஆசிரியர்
எதிர்பார்ப்பு - படித்த அழகிய பெண்

பிறந்த திகதி - 16.02.1985 மதம் - இந்து
ஜாதி - S ஆண் நட்சத்திரம் - பூராடம்
கி.பா - செவ் - 4 இல்
தகைமை -
தொழில் - ஆசிரியர்
எதிர்பார்ப்பு - உத்தியோகப் பெண்

பிறந்த திகதி - 24.10.1989 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - மகம்
கி.பா - செவ் - 2இல்
தகைமை - அரச உத்தியோகம் தொழில் - அரச உத்தியோகம்
எதிர்பார்ப்பு - உத்தியோகப் பெண் இல்லாதுவிடில் சீதனம் கொடுக்கக் கூடிய பெண்

மணமகள் விபரம்

பிறந்த திகதி - 22.08.1992 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - ரோகிணி
கி.பா -
செவ் - 12
தகைமை - HNDA
தொழில் - MOH
எதிர்பார்ப்பு - உத்தியோகம்

பிறந்த திகதி - 03.09.1994 மதம் - இந்து
ஜாதி - N பெண் நட்சத்திரம் - பூசம்
கி.பா - செவ் - 7 இல்
தகைமை - BA
தொழில் -
எதிர்பார்ப்பு - உத்தியோக மணமகன்

பிறந்த திகதி - 04.01.1994 மதம் - இந்து
ஜாதி - N பெண் நட்சத்திரம் - அஸ்தம்
கி.பா - செவ் - 7 இல் சூரி/ செவ்
தகைமை - BA தொழில் -
எதிர்பார்ப்பு - உத்தியோக மணமகன்

077 650 5097, 077 887 6969
தலைமை அலுவலகம் - கனடா - 001415666611855

### நியூஸிலாந்துடனான முதல் டெஸ்ட் போட்டி

# பங்களாதேஷ் அணி 401 ஓட்டங்கள்



பங்களாதேஷ் - நியூஸிலாந்து அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டம் இன்று நிறைவடைந்துள்ளது. இன்றைய நாள் ஆட்ட நேர முடிவில் தனது முதல் இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிவரும் பங்களாதேஷ் அணி 6 விக்கெட்டுகளை இழந்து 401 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இந்தப் போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட நியூஸிலாந்து அணி அனைத்து விக்கெட்களையும் இழந்து 328 ஓட்டங்களை பெற்றது.

டெவொன் கொன்வே 122 ஓட்டங்களையும் ஹென்றி நிக்கோல்ஸ் 75 ஓட்டங்களையும் வில் யங் 82 ஓட்டங்களையும் எடுத்தனர். பங்காதேஷின் பந்துவீச்சில் சொரிபுல் இஸ்லாம் மற்றும் மெஹதி ஹசன் ஆகியோர் தலா 3 விக்கெட்களை வீழ்த்தினர்.

இதனையடுத்து தனது முதலாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடி வரும் பங்களாதேஷ் அணி, இன்றைய நாள் ஆட்டம் நிறைவு வரை 6 விக்கெட்டுகளை இழந்து 401 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. அணித்தலைவர் மொமினுல் ஹக் 88 ஓட்டங்களையும், லிட்டொன் தாஸ் 86, மஹ்முதுல் ஹசன் ஜோய் 78 ஓட்டங்களைப் பெற்றனர். 4 விக்கெட்டுகள் கைவசமுள்ள நிலையில், தனது முதல் இன்னிங்ஸை பங்களாதேஷ் அணி நாளை தொடரவுள்ளது.

## சர்வதேச கிரிக்கெட் வாழ்விலிருந்து விடைபெற்றார் பாகிஸ்தானின் சகலதுறை வீரர் மொஹமட் ஹபீஸ்

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னணி வீரரான மொஹமட் ஹபீஸ், சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுகிறார் என அறிவித்துள்ளார். அதேவேளை, தொடர்ந்தும் முன்னணி ரி-20 லீக் தொடர்களில் விளையாடுவேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது 41 வயதான ஹபீஸ், 2003ஆம் ஆண்டு சிம்பாப்வேக்கு எதிரான ஒருநாள் போட்டியில் சர்வதேச அரங்கில் அறிமுகமாயிசிருந்தார். பாகிஸ்தான் அணிக்காகத் தனது இறுதி சர்வதேசப் போட்டியை ஆஸ்ரேலியாவுக்கு எதிராக கடந்த ரி-20 உலகக் கிண்ண அரையிறுதியில் விளையாடியிருந்தார்.

இதுவரை 55 டெஸ்ட் போட்டிகளில் ஓர் இரட்டைச் சதம், 10 சதங்கள் 12 அரைச்சதங்கள் அடங்கலாக 3 ஆயிரத்து 652 ஓட்டங்களை சேர்த்திருக்கிறார். இவரால் ஓர் இன்னிங்ஸில் பெறப்பட்ட அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கை 224 ஆகும். 2018 ஆம் ஆண்டு டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றார்.

2019 ஆம் ஆண்டு ரி-20 உலகக் கிண்ணத் தொடருக்குப் பின்னர் அவர் ஒருநாள் போட்டிகளில் விளையாடியிருக்கவில்லை. 218 ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ள ஹபீஸ், 38 அரைச்சதங்கள், 11 சதங்கள் அடங்கலாக 6,614 ஓட்டங்களைக் குவித்துள்ளார். ஒருநாள் போட்டிகளில் அவரது அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கை 140 ஆகும். இறுதியாக லோர்ட்ஸில் பங்களாதேஷுக்கு எதிராக ஒருநாள் போட்டியில் அவர் விளையாடியிருந்தார்.

2012ஆம் ஆண்டு ரி-20 உலகக்கிண்ண தொடரில் அரையிறுதிக்கு அழைத்துச் சென்ற ஹபீஸ், 2014ஆம் ஆண்டு குழுநிலையுடனே வெளியேற்றப்பட்ட பாகிஸ்தான் அணிக்குத் தலைமை தாங்கினார்.

119 ரி-20 போட்டிகளில் விளையாடி 14 அரைச்சதங்கள் அடங்கலாக 26.46 என்ற சராசரியில் 2,514 ஓட்டங்களை எடுத்திருக்கிறார்.

சகலதுறை வீரரான இவரது பந்து வீச்சு அவ்வப்போது சர்ச்சைக்குள்ளாகியிருந்தாலும் டெஸ்ட் போட்டிகளில் 53, ஒருநாள் போட்டிகளில் 139, ரி-20 போட்டிகளில் 61 விக்கெட்டுகளை இவர் வீழ்த்தியிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது

# எதிர்காலத்தில் கடுமையான தீர்மானங்களை எடுக்கத் தயாராகின்றார் ஜனாதிபதி கோட்டா!



இந்த நாட்டின் ஜனாதிபதியாக என்னைத் தெரிவுசெய்த மக்களின் அபி லாஷைகளை நிறைவேற்றுவதற்காக இதுவரை நாம் எதிர்கொண்ட தடைகளைக் கடந்து, புதிய பயணத்தை மேற்கொள்ள தயாராக உள்ளேன். அதற்காகக் கடுமையான முடிவுகளை எடுக்க வேண்டி ஏற்பட்டாலும், அதற்கும் நான் தயாராகவே இருக்கிறேன் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மஹா விஹாரவசங்சிக கோட்டே ஸ்ரீஜெண கல்யாணி சாமஸ்ரீ தர்ம மஹா சங்க சபையால் ஜனாதிபதிக்கு 'ஸ்ரீஜெண லங்காதீஸ்வர பத்ம விபூன' விருது நேற்றையதினம் வழங்கிவைக்கப்பட்டது.

மேற்படி நிகழ்வில் கலந்துக்கொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தெரிவிக்கையில் –

கோட்டே ஸ்ரீ கல்யாணி சாமகிரி தர்ம மஹா சங்க சபையால் எனக்கு வழங்கப்பட்ட கௌரவ பட்டத்தை, பணிவான கௌரவத்துடன் ஏற்றுக்கொள்கின்றேன் என்பதை முதலில் குறிப்பிட விரும்புகின்றேன்.

அதேபோன்று, நாட்டின் எதிர்கால வேலைத்திட்டங்களை வெற்றிகரமாகத் தொடர எனக்கு வழங்கப்பட்டுள்ள ஆசீர்வாதங்கள் பெரும் பலமாகவும் ஊக்கமாகவும் இருக்கும் என்றும் நான் நம்புகிறேன்.

எனக்கு வழங்கப்பட்ட அறிவுரைகளையும் வழிகாட்டுதல்களையும் நான் மதிக்கிறேன். அவை அனைத்தையும் நான் மரியாதையுடன் ஒப்புக்கொள்கிறேன். அதை என் அதிர்ஷ்டமாகவும் கருதுகிறேன்.

எனது பெற்றோரின் பாரம்பரியத்தால் ஒரு பௌத்தராகப் பிறந்து, நாட்டின் முன்னணி பௌத்த பாடசாலைகளில் ஒன்றான கொழும்பு ஆனந்தா கல்லூரியில் நான் பெற்ற பயிற்சி, கல்யாண மித்திர மஹா சங்கத்தினரின் அறிவுரைகளைப் பின்பற்றிய உத்வேகம், இராணுவத்தில் நான் பணிபுரிந்தமையால் பெற்ற ஒழுக்கம் என்பன, எனது வாழ்க்கை மிகவும் சிறப்பானதாக மாறக் காரணமாய் அமைந்தன என்பதை இந்நேரத்தில் விசேடமாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

இராணுவ அதிகாரியாகவும் பாதுகாப்புச் செயலாளராகவும் நான் நாட்டுக்கு ஆற்றிய சேவையைப் பாராட்டி, நீங்கள் என்னைக் கௌரவிக்கின்றீர்கள்.

எனது இருபது வருடகால இராணுவச் சேவையின் போது, ஈழப்போரின் ஆரம்ப காலத்திலும் இரண்டாம் ஈழப்போரின் போதும், வடக்கு மற்றும் கிழக்கில் நான் பல முக்கிய பணிகளைச் செய்தேன்.

இந்திய அமைதி காக்கும் படை வருவதற்கு முன்னர், வடமராட்சி நடவடிக்கையின் நான்கு படைப்பிரிவுகளில் ஒன்றுக்கு நான் கட்டளையிடும் அதிகாரியாகப் பணிபுரிந்தேன். இது அப்போது செயற்பாட்டில் இருந்த மிகப்பெரிய நடவடிக்கையாகும்.

இரண்டாம் ஈழப்போர் ஆரம்பமாகிய சந்தர்ப்பத்தில், யாழ்ப்பாணக் கோட்டையை விடுவிக்க முதல் இரண்டு படைப்பிரிவுகளில் ஒன்றுக்கு நான் கட்டளையிட்டேன். வெலிஓயா, வவுனியா மற்றும் திருகோணமலை போன்ற பிரதேசங்களில் பல முக்கிய பணிகளைச் செய்தேன். அதற்காக ரணசூர (போர்வீரர்) மற்றும் ரண விக்ரம (போர்வீரர்) பதக்கங்களையும் ஜனாதிபதி விருதுகளையும் பெற்றேன்.

பாதுகாப்புச் செயலாளர் என்ற வகையில் முப்பது வருடகால யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர நேரடியாகப் பங்களித்ததை நீங்கள் நன்கு அறிவீர்கள். நான் பெரும்பான்மை சிங்கள மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி என்பதை, ருவன்வெலி மஹா சேயவுக்கு முன்பாக ஜனாதிபதியாகப் பதவிப்பிரமாணம் செய்துகொண்டபோது அறிவித்தேன்.

என்னை இந்த நாட்டின் முதல் குடிமகனாக ஆக்குவதற்கு பல அர்ப்பணிப்புகளைச் செய்த சிங்கள பௌத்தர்களையும் அவர்களின் பாரம்பரியத்தையும் பாதுகாக்கும் பூரண பொறுப்பு எனக்கு உள்ளது என நான் உறுதியாக நம்புகிறேன்.

இதற்காக நான் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயற்படுவதுடன், நான் பெற்ற பௌத்த போதனைகளும் உத்வேகமும், இந்நாட்டின் ஏனைய சகோதர மதத்தினரும் அச்சமோ சந்தேகமோ இன்றி சுதந்திரமாக வாழக்கூடிய சூழலை நான் ஏற்படுத்தியுள்ளேன் என்பதையும் விசேடமாகக் குறிப்பிட வேண்டும்.

மதிப்பிற்குரிய தேரர்களே, நான் ஜனாதிபதியாவதற்கு முன்னர், கூரகல புண்ணிய பூமி, முஹுது மஹா விகாரை, தீகவாபி புண்ணிய பூமி போன்ற எமது பௌத்த விஹாரைகள் இருந்த விதம், அங்கு தங்கியிருந்த பிக்குகள் எவ்வாறு நடத்தப்பட்டனர், அந்த விஹாரைக்குரிய காணிகளின் நிலைமை என்ன என்பதை நாம் அனைவரும் அறிவோம். அந்த விஹாரைகளின் தற்போதைய நிலை குறித்து நாம் அனைவரும் மகிழ்ச்சியடைய முடியும்.

எனது ஆட்சிக் காலத்தில், நமது புராதன பௌத்த பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்கு நாங்கள் செயல் ரீதியாக உறுதியளித்துள்ளோம். இரண்டு வருடங்களாக உலகளாவிய தொற்றுப் பரவலை வெற்றிகரமாகக் கட்டுப்படுத்துவதற்கு எம்மால் முடிந்தது.

ஆனாலும், அது ஏற்படுத்திய சில பொருளாதார மற்றும் சமூக அழுத்தங்கள், இந்நாட்டு மக்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்கள் காரணமாக ஒருசிலர் என்னை அவமானப்படுத்தினாலும் அதைத் தாங்கும் சக்தி என்னிடம் உள்ளது.

மேலும், என்னை அவமதிக்கும் எவரும் என் வாழ்நாளில் நான் இந்நாட்டுக்குச் செய்த சேவைகளில் ஒரு சிலதையாவது செய்யாதவர்களே அல்லர். இந்த உலகில் அவமானம் அல்லது புகழை மட்டுமே பெற்ற எவரும் இல்லை என்று புனித பௌத்த போதனை தம்மபதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நாட்டில் பௌத்த தத்துவத்தைப் பாதுகாத்து வளர்ப்பதற்கு நான் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறேன் என்பதை இத்தருணத்தில் விசேடமாகக் குறிப்பிட வேண்டும். பல்லாயிரம் வருட வரலாற்றைக் கொண்ட சிங்களக் கலாசாரத்தையும் பாரம்பரியத்தையும் நாம் எப்போதும் பாதுகாக்க வேண்டும்.

எனவே, நமது விழுமியங்கள், மரபுகள் மற்றும் பழக்கவழக்கங்களைப் பாதுகாக்க அரசாங்கம் தொடர்ந்து அனுசரணை வழங்கும். வரலாறு முழுவதும் இந்த நாட்டின் பிரதான கலாசாரத்துடன் இணைந்து சமாதானமாகவும் நல்லிணக்கத்துடனும் வாழ்ந்த அனைத்து இலங்கைப் பிரஜைகளுக்கும், தமது சமய மற்றும் தேசிய அடையாளங்களைப் பாதுகாத்து கௌரவத்துடன் வாழ்வதற்கு உள்ள உரிமையை நான் எப்போதும் நிலைநாட்டுவேன்.

இந்த நாட்டின் ஜனாதிபதியாக என்னைத் தெரிவு செய்த மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்காக இதுவரை நாம் எதிர்கொண்ட தடைகளைக் கடந்து, புதிய பயணத்தை மேற்கொள்ளத் தயாராக உள்ளேன். அதற்காகக் கடுமையான முடிவுகளை எடுக்கவேண்டி ஏற்பட்டாலும், அதற்கும் நான் தயாராகவே இருக்கிறேன் என்பதை, இந்தச் சங்கைக்குரிய மற்றும் மரியாதைக்குரிய மஹா சங்கத்தினரின் முன்னிலையில் பொறுப்புடன் தெரிவிக்கிறேன்.

கோட்டே ஸ்ரீகல்யாணி சாமகிரி தர்ம மஹா சங்க சபையால் எனக்கு வழங்கப்பட்டுள்ள கௌரவப் பட்டத்தையும் ஆசிகளையும், பணிவான கௌரவத்துடன் ஏற்றுக்கொள்கின்றேன் என்பதை மீண்டும் வலியுறுத்த விரும்புகின்றேன்.

மலர்ந்த புத்தாண்டு, சங்கைக்குரிய மஹாநாயக்க தேரர்களுக்கும் அனைத்து மஹா சங்கத்தினருக்கும், உங்கள் அனைவருக்கும் சுபீட்சம் நிறைந்த மகிழ்ச்சிமிக்க ஆண்டாக அமைய வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்.

## முட்டை மற்றும் கோழி இறைச்சி விலையில் ஏற்படவுள்ள மாற்றம்

முட்டை மற்றும் கோழி இறைச்சியின் விலையைக் குறைக்க இணக்கம் வெளியிடப்பட்டுள்ளது.

முட்டை ஒன்றின் விலையை 2 ரூபாவாலும் கோழி இறைச்சியின் விலையை 50 ரூபாவாலும் குறைப்பதற்கு வர்த்தகர்கள் இணக்கம் வெளியிட்டுள்ளனர் எனக் கால்நடை, பண்ணை வளர்ச்சி மற்றும் பால் மற்றும் முட்டை தொழில் இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கமைய இன்று முதல் விலை குறைவடையவுள்ளதென அமைச்சு தெரிவித்துள்ளது.

கால்நடை தீவனத்துக்கான கோதுமை இறக்குமதிக்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது. அதன் ஊடாக மக்களுக்கு நிவாரணம் வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் டி.பி. ஹேரத் தெரிவித்துள்ளார்.

## ஆஸ்திரேலியாவில் யாழ். இளைஞர் சாவு!

ஆஸ்திரேலிய கடலில் மூழ்கி யாழ்ப்பாணத்தை சேர்ந்த இளைஞன் பலியாகி உள்ளார் என அந்நாட்டு ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

யாழ்ப்பாணம் – சாவகச்சேரியைச் சேர்ந்த 29 வயதான சிறிபிரகாஸ் செல்வராசா என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடலில் நீராடிக்கொண்டிருந்த நிலையில் கடலில் இழுத்துச் செல்லப்பட்டுப் பலியாகியுள்ளார். அவசர சேவைகளுக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து, சம்பவ இடத்துக்கு பொலிஸார் விரைந்திருக்கிறார்கள்.

வெகுநேரம் தேடிய பின்னர், அன்று மாலையளவில் சிறிபிரகாஸின் சடலம் கடற்கரையில் தென்மேற்கு கரையிலிருந்து மீட்கப்பட்டிருக்கிறது.

விக்டோரியாவின் மிக ஆபத்தான கடற்பகுதியாக அந்தக் கடல் அறிவிக்கப்பட்டுவருகிறது. தொடர்ச்சியாக மாறுகின்ற காலநிலையால் கொந்தளிப்பது மாத்திரமன்றி, இந்தக் கடலில் சுறா தாக்குதல்களும் பரவலாக இடம்பெற்றிருக்கின்றன. இந்தப் பகுதியில் இந்தவருடம் இடம்பெற்றுள்ள ஆறாவது உயிர்ப்பலி இதுவாகும்.

நீச்சல்காரர்களுக்கு உதவியாக கரையில் பணியமர்த்தப்படுகின்ற உயிர்காக்கும் படையினரின் எண்ணிக்கையை அதிகரித்திருப்பதாக உயிர்காக்கும் படைப்பிரிவின் விக்டோரிய தலைவர் தெரிவித்துள்ளார்.

## பாடகி யொஹானிக்கு வழங்கப்பட்ட காணியின் பெறுமதி பல கோடி ரூபா!

இலங்கை அமைச்சரவை தீர்மானத்துக்கு அமைய பாடகியான யொஹானி டி சில்வாவுக்கு வழங்கப்பட்ட காணியின் பெறுமதி வெளியாகி உள்ளது.

பத்தரமுல்லை ரொபர்ட் குணவர்தன வீதியில் அமைந்துள்ள குறித்த காணியின் பெறுமதி 4 கோடி ரூபா என அரசாங்க மதிப்பீட்டு திணைக்களம் மற்றும் காணிப் பதிவு திணைக்களத் தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

குறித்த பிரதேசத்தில் ஒரு பேர்ச் காணியின் விலை தற்போது 40 லட்சம் ரூபாவைக் கடந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அமைச்சரவை யோசனைக்கமைய அவருக்கு 9.68 பேர்ச் காணி வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. 1996 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை வென்ற அணி வீரர்களுக்கு 99 வருடக் குத்தகை அடிப்படையில் ஒதுக்கப்பட்ட காணிக்கு அருகில் யொஹானிக்கான காணி இருப்பதாக அமைச்சரவை தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. சர்வதேச அளவில் தனது நாட்டின் நற்பெயரை அங்கீகரிப்பதற்காகவே இந்த காணியை அவருக்கு வழங்கியதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. டிசெம்பர் மாதம் 20ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் பிரதமர் மஹிந்த



ராஜபக்ஷவால் இந்த யோசனை முன்வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.01.2022இல் வெளியிடப்பெற்றது.